# சிங்காரச்சென்னை

SINGHARA CHENNAI

ஆசிரியர் S. ரங்கநாதன் | தமிழ் மாதம் இருமுறை

| 05 அக்டோபர் - 19 அக்டோபர் 2009 | மலர் 1 இதழ் 19 | இலவச விநியோகம் | 8 பக்கங்கள் |
|---|---|---|---|
| 05 OCTOBER - 19 OCTOBER 2009 | VOLUME 1- ISSUE 19 | Free distribution | 8 PAGES |


## வா. கணேசன் தலைமையில் பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நிறைவு விழா







பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நுங்கம்பாக்கம் இராமா தெருவில் 108வது வட்ட மாமன்ற உறுப்பினர் வா.கணேசன் தலைமையில் கழக கொடியினை பகுதி துணைச் செயலாளர் சியாமளா ஏற்றி வைத்தார். பொதுக்குழு உறுப்பினர் ரெட்சன் அம்பிகாபதி இனிப்பு வழங்கினார். உடன், ஜெ.சுந்தர், தே.அரி, சிராஜ், சம்பந்த மூர்த்தி, நு.பே.மோகன், பி.டி.சி.பழனி, வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் பலர் கலந்துகொண்டு விழாவினை சிறப்பித்தனர்.


**INSURANCE SERVICES**

*For all kind of insurance policies*

**L.I.C. MEDICLAIM**

PLEASE CONTACT

**S. RANGANATHAN**

**98403 44783 / 93828 47398**




# ரேஷன் கடை எடை குறைவு பற்றி புகார் தெரிவிக்க.....

ரேஷன் கடையில் வாங்கும் பொருட்கள் ஒரு கிலோவிற்கு குறைந்தபட்சம் 25கிராம் முதல் அதிகபட்சம் 75 கிராம் வரை குறைவாக உள்ளதாக பொதுமக்கள் பலர் சிங்காரச்சென்னை பத்திரிகை அலுவலகத்தில் புகார் கொடுத்த வண்ணம் உள்ளார்கள்.

மேற்கண்ட புகாரை குடும்ப அட்டைதாரர்கள் தங்களது பெயர், முகவரி, குடும்ப அட்டை எண் குறிப்பிட்டு

**ஆணையாளர்,**
**உணவுப் பொருள் வழங்கல் மற்றும்**
**நுகர்வோர் பாதுகாப்புத்துறை,**
**எழிலகம், 4வது தளம்,**
**சேப்பாக்கம், சென்னை-600 005**

என்ற முகவரிக்கு புகார் மனு எழுதி நேரிடையாகவோ, தபால்மூலமாகவோ அனுப்பலாம். அல்லது மின்அஞ்சல் **consumer@tn.nic.in** என்ற முகவரிக்கு இமெயில் மூலம் புகார் தெரிவிக்கலாம்.

சமீபத்தில் எந்தெந்த ரேஷன் கடையில் எத்தனை கிலோ அரிசி, சர்க்கரை, மற்ற உணவுப் பொருட்கள் இருக்கிறது என்று தெரிய எஸ்.எம்.எஸ். மூலம் தகவல் பெறும் முறையை சம்பந்தப்பட்ட துறை ஏற்பாடு செய்திருந்தது. அதற்குப் பதிலாக தாங்கள் வாங்கும் பொருட்கள் சரியான எடையில் உள்ளதா என்பதனை பொதுமக்கள் அறிய ரேஷன் பொருட்களை பேக்கிங்கில் வழங்கினால் எடை குறைவை அரசு தவிர்க்கலாம்.

மேலும் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ''தமிழ்நாடு நுகர்வோர் கவசம்'' என்ற மாத இதழை நடத்தி வருகிறது. மேற்கண்ட புத்தகம் அனைத்து ரேஷன் கடையிலும் கண்டிப்பாக விற்பனைக்கு வைத்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டுமென பொதுமக்கள் விரும்புகிறார்கள்.

## வாகன ஓட்டிகள் உறுதிமொழி

- சாலை விதிகளை மதிப்போம் - விபத்தினை தடுப்போம்!
- குடிபோதையில் வாகனம் ஓட்டுவதை தவிர்ப்போம்!
- ஒருவழிப் பாதையில் செல்வதை தவிர்ப்போம்!
- தலைக்கவசம் அணிந்து வாகனம் செலுத்துவோம்!
- இருசக்கர வாகனத்தில் இருநபர்களுக்கு மேல் செல்வதை தவிர்ப்போம்!
- வாகனம் ஓட்டும்பொழுது செல்போன் பேசுவதை தவிர்ப்போம்!
- ஓட்டுநர் உரிமம், ஆர்.சி. புத்தகம், இன்சூரன்ஸ் வைத்திருப்போம்!



சிங்காரச்சென்னை **எஸ். ரங்கநாதன்**

உங்கள் விளம்பரங்கள் மற்றும் செய்திகளுக்கு
தொடர்பு கொள்ளுங்கள்

**சிங்காரச்சென்னை**

(தமிழ் மாதம் இருமுறை)
58/19, வடக்கு மாட வீதி,
நுங்கம்பாக்கம், சென்னை 600 034.
மின்னஞ்சல் : singharachennai@gmail.com
98403 44783
ஆசிரியர் S. ரங்கநாதன்






அனைவருக்கும்
**எனது இனிய**
**தீபாவளி**
**நல்வாழ்த்துக்கள்**

**வா.கணேசன்**
(108-வது வட்ட மாமன்ற உறுப்பினர்)
சென்னை மாநகராட்சி

**18th OCTOBER Sunday, 4 p.m. & 7.00 p.m.**
**SREE VAARI FINE ARTS** *Presents*
Cinefame **Crazy Mohan & Balaji** in
**"CHOCLATE KRISHNA"**
**by**
**CRAZY MOHAN**
**Rani Seethai Hall** *A/C,*



**98844 91390**

**தனசேகர் பட்டாசு கடை**

"STANDARD"
FIREWORKS

நுங்கம்பாக்கத்தில் குறைந்த விலையில்
தரமான பட்டாசு வாங்க
தனசேகர் பட்டாசு கடை.
140, வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை - 34
(நுங்கம்பாக்கம் F-3 காவல்நிலையம் எதிரில்)
**போன் : 94443 10013**

**Deepavali Mega Offer**
# FREE DEMAT A/C
**for EQUITIES, COMMODITIES, FEATURES & FOREX TRADING**
**Very Very Low Brokerage**
**Free Software worth Rs. 2000/-**
For More Details Please Contact
**Anu - 96000 50072**

# “சிங்காரச்சென்னை இயர்புக் - 2010”

## SINGHARA CHENNAI YEAR BOOK - 2010

2009, ஜனவரி மாதம் 5ம் தேதி முதல் நுங்கம்பாக்கம் பகுதி மக்களுக்காக சேவை மனப்பான்மையோடு தொடங்கப்பட்டு, தொடர்ந்து மாதம் இருமுறை வெளிவரும் “**சிங்காரச்சென்னை**” தமிழ் செய்தித்தாள் பகுதி மக்களின் வேண்டுகோளுக்கு இணங்கி “**சிங்காரச்சென்னை இயர்புக் - 2010**” வரும் ஜனவரி மாதம் வெளியிட இருக்கிறோம்.

“**சிங்காரச்சென்னை இயர்புக் - 2010**”-ல் நுங்கம்பாக்கத்தின் சிறப்பு அம்சங்கள், அரிய தகவல்கள், முக்கிய நபர்களின் விலாசங்கள் மற்றும் தொலைபேசி எண்கள், நுங்கம்பாக்கத்தில் உள்ள அனைத்து வணிக நிறுவனங்களின், வியாபாரிகளின் விபரங்கள், முகவரிகள், தொலைபேசி எண்கள், அனைவருக்கும் தேவைப்படக்கூடிய அரசு அலுவலங்களின் முகவரிகள், மருத்துவமனை மற்றும் இதர விபரங்கள் அனைத்தும் உள்ளடக்கி ஒவ்வொருவரின் கையிலும் இருக்க வேண்டிய ஒரு அரிய பொக்கிஷமாக தயாரிக்கப்பட்டு வருகிறது.

மேற்கண்ட புத்தகம் நுங்கம்பாக்கம் -சென்னை - 600 034 -ல் குடும்ப அட்டை வைத்துள்ள ஒவ்வொருவருக்கும் ஒரு புத்தகம் இலவசமாக வழங்கப்பட உள்ளது.

சுமார் 10,000 புத்தகங்கள் இலவசமாகவும் சுமார் 5,000 புத்தகங்கள் வணிக நிறுவனங்களுக்கும், வியாபாரிகளுக்கும் வழங்க முடிவு செய்யப்பட்டு சிறப்பான முறையில் தயார் செய்யப்பட்டு வருகிறது.


எனவே, சிங்காரச்சென்னை பத்திரிகையின் முதலாம் ஆண்டு விழாவில் (ஜனவரி 2010) வெளியிடப்படும் “**சிங்காரச்சென்னை இயர்புக் - 2010**”-ல் உங்கள் விளம்பரம் தவறாமல் இடம் பெற உடனடியாக சிங்காரச் சென்னை அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

**அலுவலகம் : 58/19, வடக்கு மாட வீதி,**
**நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.**
**போன் : 98403 44783**

இப்படிக்கு
**சிங்காரச்சென்னை எஸ்.ரங்கநாதன்**
ஆசிரியர் - பதிப்பாளர்

தானத்தில் சிறந்தது இரத்த தானம்


**SRI MAHALAKSHMI TRANSPORT**
**TRANSPORT, CONTRACTOR & PACKERS & MOVERS**



**Office and Household Shifting, 24 Hours Service**
**EICHER-TATA-MINI LORRY, Regular Service**
**Tamilnadu, Andhra, Karnataka, Kerala & Pondicherry**
No.3, IInd Street, Pushpa Nagar, Nungambakkam, Chennai - 600 034.
(Near Loyola College Compound)
**Ph : 28175551, 28175552, 28175553, 28175554**
**Cell : 9444075559**

**L.S. WATER SUPPLIERS**
**15/7, North Mada Street, Nungambakkam, Chennai - 34.**



**20 Ltr. Sri Balaji**
**20 Ltr. Bislery**
**25 Ltr. Kinley**



Please Contact for above Watercan
**PH : 2827 2402, 98409 13838**

**வீடு / ஃப்ளாட் / அலுவலகம்**
**வாடகைக்கு / வாங்க / விற்க**



அணுகவும்
**விக்னேஷ் ஹோம்ஸ்**
இரண்டாவது மாடி,
பழைய எண். 188, புதிய எண். 132,
வள்ளுவர்கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம் காவல்நிலையம் எதிரில்,
**93807 04083, 93808 40393**
ரூ.3,000, ரூ.4,000 பட்ஜெட்டில் வீடு வாடகைக்கு உள்ளது.

EXCLUSIVE BEAUTY SHOP FOR LADIES & KIDS

**DHARSANA**
Beauty Parlour

- Bridal Makeup
- Hair Spa
- Hair Fall Treatment
- Dandruff Treatment
- Under Eye Teatment
- Pimple Treatment
- Hair Coloring

& More
@ Surprise Rates

58/19. North Mada Street,
Nungambakkam, Chennai - 600034

# ஓட்டுனர் சமுதாயத்தை வாழ வைக்கும் ரெட்சன் C.அம்பிகாபதி அவர்களுக்கு வாழ்த்துக்கள்



சுற்றுலா வாகன தொழிற் துறையில் மாபெரும் புரட்சி செய்துவருபவர் ஓட்டுநர்களின் பாதுகாவலர் திரு.ரெட்சன் சி. அம்பிகாபதி நிறுவனத் தலைவர், தமிழக ஓட்டுநர்கள் & உரிமையாளர்கள் சங்கம்.


பன்னாட்டு நிறுவனங்கள் தமிழகத்திற்குள் நுழைந்து சுற்றுலா துறையில் சிறு சிறு முதலீட்டாளர்களையும் ஓரிரு வாகன உரிமையாளர்களையும் நசுக்கப்படுவதை ஆரம்பக்கட்டத்திலேயே, பன்னாட்டு நிறுவனங்களின் வருகையை தடுத்து நிறுத்தியவர் தலைவர் திரு. ரெட்சன் சி.அம்பிகாபதி அவர்கள்.

ஓட்டுநர்களுக்கு வேலை இல்லை என்ற சொல்லே இல்லை என்கிற அளவிற்கு FAST TRACK Call Taxi மூலமும், TOP 4 Call Drivers மூலமும், அனைத்து ஓட்டுநர்களுக்கும் வேலை வாய்ப்பை தந்து, அவர்களை உரிமையாளராக மாற்றிக்கொண்டு இருப்பவர் ஓட்டுநர்களின் பாதுகாவலர் திரு.ரெட்சன் சி.அம்பிகாபதி அவர்கள்.

மாநில பொதுச்செயலாளரும் ஓட்டுநர்களில் ஒருவராகிய நான், என் உள்ளத்திற்குள் நீண்ட நாளாக இருந்த ஓட்டுநர்களுக்கென்று ஒரு பத்திரிகை வேண்டும் என்ற என் ஆசைக்கனவை நிறைவேற்றி தந்த என் தலைவருக்கு ஆயிரம் ஆயிரம் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

கோடான கோடியாய் நிறைந்து இருக்கும் ஓட்டுநர்கள் அனைவரின் சார்பில் பாராட்டுதல்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டு ஓட்டுநர் ஓசை மென்மேலும் வளர ஓட்டுநர்கள் அனைவரும் இணைந்து நிற்போம்! என்ற சபதம் ஏற்போம்.

வாழ்க தலைவர் புகழ்!
வளர்க ஓட்டுநர் ஓசை



இப்படிக்கு

என்றென்றும் ஓட்டுநர்களின்
தோழமையுள்ள தோழன்
**ப.முனுசாமி (எ) P.R.சாமி**
தமிழக ஓட்டுநர்கள் &
உரிமையாளர்கள் சங்கம்
ஓங்கி ஒலிக்கட்டும்
“ஓட்டுநர் ஓசை”

## சமையலும் ஒரு கலைதான்

சமையல் என்பது ஒரு கலை. நம்மில் பலரும் சமையல் ருசியாக இருக்க வேண்டும் என்பதில் கவனம் செலுத்தும் அளவிற்கு, அதிலுள்ள சத்துக்கள் குறித்து கவனம் செலுத்துவதில்லை. சிறந்த முறையில் சமையல் செய்ய விஞ்ஞான பூர்வமான அறிவு மிகமிக அவசியம். காய், கீரை, தானிய வகைகள், பருப்பு வகைகள் ஆகியவற்றின் தன்மை, மணம், நிறம் மாறாமல் சமைப்பதே சிறந்த ஆரோக்கியமான சமையல். சமைக்கும் உணவு பொருட்களின் சத்து குறையாமல் சமைப்பது மிக அவசியம்.

❖ கேரட், பீட்ரூட், முள்ளங்கி ஆகியவை உடலுக்கு அதிகம் நன்மை பயப்பவை. இவற்றில் தோலை அரிந்து எறிந்து விடக்கூடாது. தோலுடன் சமைப்பதே சிறந்த முறை.



❖ கீரை வகைகள் வேகும் போது அதிலிருந்து ஒருவித நச்சுக்காற்று வெளியேறும். எனவே வேகும்போது மூடிபோட்டு மூடக்கூடாது. அவ்வாறு மூடினால் நச்சுக்காற்று கீரையிலேயே தங்கி உடலுக்கு கெடுதியை உண்டு பண்ணும்.

❖ அரிசி, தானிய வகைகளை அதிகளவில் நீரில் கழுவக்கூடாது. அதிலுள்ள தாதுக்கள், வைட்டமின்கள் தண்ணீரில் கரைந்து விடும்.

❖ தக்காளி சூப் செய்து நீண்ட நேரம் வைத்திருந்தால் அது அமிலத்தன்மை உடையதாக மாறிவிடும். இதை தடுக்க சூப் இளஞ்சூடாக இருக்கும் போதே ஒரு சிட்டிகை சோடாமாவு சேர்க்க வேண்டும்.

ARUN FASHIONS
LADIES TAILOR
* Chudidhar * Punjabi set, Gagra Choli
For Ladies & Children Tailors
304, Valluvar Kottam High Road
GENTS TAILOR
* Suits & Safari * Pant & Shirt
Specialist in all types of Tailoring
4-24, Kutty Street
NUNGAMBAKKAM, CHENNAI - 600 034. 2825 8585, 2825 6721




அனைவருக்கும் எனது இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்
V.சேகர்
107 வது வட்ட தலைவர், காங்கிரஸ் கமிட்டி
ஆயிரம் விளக்குப் பகுதி

# தீப ஒளியை வணங்குவோம்

இவ்வுலகில் முதற்கண் தோன்றியது ஆகாய ஊழி. அதற்குப்பின் எல்லாப் பொருள்களையும் அசைத்துக் கொண்டெழுகின்ற காற்றும், அக்காற்றினின்றும் சிவந்து நெருப்பாய்த் தோன்றிய தீயூழியும், அத் தீயினின்றும் தோன்றிப் பனியும் குளிர்ந்த மழையுமாகப் பொழிகின்ற நீர் ஊழியும், அந்நீரினின்றும் தோன்றியது நிலம் என்றும் தத்துவ நூல்கள் கூறுகின்றன. நிலம், நீர், வளி, வான் ஆகிய நான்கின் ஆற்றல்களையும் உலகிற்குக் காட்டுவது ஒளியேயாகும்.

ஒளிவடிவமான வெப்பம் மிகுந்த ஒருபெருங்கோளத்தின் சிறு துண்டுதான் மண்ணுலகாகக் குளிர்ந்து உலர்ந்து, அதில் மாக் கடல்களும் தேங்கின என்பது அறிவியல் ஆய்வுகள் அறிவுறுத்தும் உண்மை.

உலக நாகரிகத்தின் தந்தையராய் விளங்கிய தமிழர்கள் அத்தகைய ஒளியின் அருமை பெருமைகளைப் பன்னெடுங்காலத்துக்கு முன்னரே அறிந்து, ஒளிப் பெருங்கோளமாகிய செங்கதிரோனைத் தங்கள் முதல் வழிபடு தெய்வமாக வணங்கினர். உருவ வழிபாடு ஏற்பட்டதற்குப் பின்னர் பஞ்சபூதங்களின் வழிபாடு வெவ்வேறு மார்க்கங்களில் இன்றளவும் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

உலகை உய்விக்கும் பேராற்றல் படைத்த பகலவனிடத்தில் உள்ள ஒளி பகலவனிடமிருந்து பிரிக்க முடியாததாய், அப்பகலவனேயாய் ஆனால் ஞாயிறு என்றும் ஒளி என்றும் பிரித்துப் பேசப்படுவது போன்று இறைவனும் விளங்கு கின்றான்.

“சோதியே சுடரே, சூழொளி விளக்கே” என்று மணிவாசகப்பெருமானும், “திகழொழியை சோதியுட் சுடராய்த் தோன்றி” என்று அப்பர் பெருமானும், “ஒளிவளர் விளக்கே” என்று திருமாளிகைத் தேவரும், “சோதித்த பேரொளி” என்று திருமூலரும், “அலகில் சோதியன்” என்று சேக்கிழார் பெருமானும், “அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாசமாய்” என்று தாயுமானவர் சுவாமிகளும், “தீப மங்கள சோதி” என்று அருணகிரிநாதரும், “அருட்சோதித் தெய்வம் என்னை ஆண்டுகொண்ட தெய்வம்” என்று திருவருட்பிரகாச வள்ளல் இராமலிங்க அடிகளும் இப்படிப் பிற்பல சைவப் பெரியவர்கள் ஒளியை இறையுடன் ஒப்பிட்டு வாழ்த்தி வணங்கியுள்ளனர்.

சோதி என்பது ஒரு பொருளையும் பற்றாது நின்று ஒளிமயமாகவே விளங்குவது. உலகில் காணப்படும் ஒளிப்பொருள்கள் இரண்டு. ஒன்று விளக்கு. மற்றொன்று சுடர். விளக்கு என்பது அகல் எண்ணெய், திரி என்ற மூன்றைப் பற்றி ஒளி வீசுவது.



சுடர் ஞாயிறும், திங்களும், விண்மீன்களும் ஆகிய இவற்றிற்குத் தம்மியல்பில் ஒளி உண்டு. ஆனால் அவ்வொளி, ஞாயிற்றையும், திங்களையும் மீனையும் பற்றியே வெளிவரும். ஆனால் சோதி என்பது அங்ஙனம் விளக்குப் போலவும் அன்று. தானே ஒளியாய் அதற்கொரு பற்றுக்கோடும் இன்றி மற்ற அனைத்தொளிக்கும் தானே ஆதாரமாய் நிற்பதாகும். எனவே, இறைவன் யாதொரு பற்றுக்கோடும் இன்றி, அதாவது தனக்கோர் ஆதாரம் இன்றித் தானே அனைத்துக்கும் ஆதாரமாய் விளங்குபவன் ஆதலால் “சோதி” என்றருளினார்.

“விவேகமே வடிவெடுத்தது ஞானதீபம். பக்தியினின்று பெருக்கெடுக்கும் அமைதியே அதற்கு எண்ணெய். ஈசுவர தியானம் அது எரிவதற்கு ஏற்ற நல்ல காற்றாகிறது. இடையறாப் பிரம்மச்சர்யத்தினின்று வரும் பேருணர்வு அத்தீபத்திற்குத் திரியாகிறது. பற்றற்ற உள்ளம் அந்த விளக்கை வைத்தற்கு ஏற்ற இடமாகிறது. அங்கு ஆசை என்னும் புயற்காற்று அடிக்காமலிருக்க வேண்டும். ஈசுவர சொரூபம் அத்தீபத்தில் எரியும் ஒளிப்பிழம்பாகிறது” என்பது திருமந்திர வாக்கு.

இத்தகைய ஒளியைப் போற்றி பல விழாக்கள் நடைபெறுகின்றன. “விளக்கு பூசை” என்று நடத்துவதுண்டு. ஞாயிற்றைப் போற்றும் விழாதான் ‘பொங்கல்’ பண்டிகை. திருவண்ணா மலை தீபமும், வடலூர் சத்தியஞான சபையில் காட்டப்படும் அருட்பெருஞ்சோதியும், பம்பா நதி கடந்து பதினெட்டுப் படியேறிய பக்தர்களுக்கு அருள் தரும் மகர ஜோதியும் ஆக எல்லா ஒளி வணக்கங்களுமே உள்ளொளி பெருக்கி மெய்ப்பொருளை உணர்த்துபவையாகும்.

கடவுளைத் தேடி காடு மலைகளுக்குச் சென்று கடுந்தவம் புரியவோ, யாகங்களும், வெவ்வேறு வழிபாட்டு முறைகளைக் கையாளவோ தேவையில்லை, அவரவர் உள்ளத்தின் உள்ளேயே, உள்ளம் கடந்த இறைவனை, ‘உள்ளொளி’ வடிவில் கண்டு மகிழலாம் என்று திருமூலரும், பின்வந்த வள்ளலாரும் தெளிவுறுத்தியுள்ளனர்.

“ஒண்சுடரானை உவப்பிலி நாதனை

ஒண்சுட ராகிஎன் உள்ளத் திருக்கின்ற

கண்சுட லேன்உல கேழும் கடந்தஅத்

தண்சுடர் ஓமத் தலைவனும் ஆமே”

இவ்விதம் உள்ளத்துள் ஒளிவீசும் சுடரான திருமூலரைப் போலவே, திருவருட்பிரகாச வள்ளலாரும் கண்டுகளித்தார். அவர் அருளிய “திருவருட்பா”வில் அவர் பாடுவதாவது:- “என்னுளே அரும்பி என்னுளே மலர்ந்து என்னுளே விரிந்த என்னுடைய அன்பே!” அருளொளி விளங்கிட ஆணவம் எனமோர் இருளை வென்றுளத் தேற்றிய விளக்கே! ‘உள்ளொளி’ ஓங்கிட உயிரொளி விளங்கிட வெள்ளொளி காட்டிய மெய்யருட் கனலே”

மாந்தரின் வாழ்க்கை நிலையற்றது. அழியப்போவது. எனவே அதை அக்கறையோடு பேணிக் காக்க வேண்டியதில்லை என்ற கூற்றுகளை, “உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்” என்று கூறி மறுத்த திருமூலரை யொட்டியே வள்ளலாரும் இறையொளியின் திருக்கோயிலே உடம்பு என்கிறார்.

“ஊன வுடம்பே யொளியுடம்பா யோங்கி நிற்க

ஞான அமுதெனக்கு நல்கியதே - வானப்பொருட் பெருஞ்சோதிப் பொதுவில் விளங்கும்

அருட்பெருஞ் சோதியது”

எனவே, உயிரை மையமாகக் கொண்டு அதிலிருந்து வரிவலையாக எழும் ஸ்ரீவகாந்த ஆற்றல் மூலம் மனத்தை ஒன்றுபடச் செய்து, விரைவு, பருமன், தொலைவு, காலம் என்னும் எண்ணுதற்குரிய நிலைகடந்து இருப்பு நிலையாகச் சுத்தவெளியாக இருக்கும் மெய்ப்பொருளை நினைந்து அதுவாகி அமைதிபெற்ற யோகிகளும், ஞானிகளும் சோதியின் சொரூபத்தைக் கண்டுள்ளனர். அத்தகைய அருட்பெருஞ்சோதியின் புற சொரூபத்தை எல்லா உயிர்களும் கண்டு இன்புறவே தினமும தீபமேற்றி வழிபடும் நாம், அந்தத் தீப ஒளியைப் போற்றுவதற்கு ஒரு நல்ல நாளினைத் தேர்ந்து உலகமக்கள் அனைவரும் ஒன்றுபட்டு வணங்கும் நாளாகத் ‘தீபாவளி’யைக் கொண்டாடுகிறோம். இந்தத் தீப ஒளித்திருநாளில் தீமைகள் தொலைந்து நல்லன வளரட்டும்.

மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்பார்கள். மக்கள் மகேஸ்வரனை நினைத்து பூஜைகள் செய்ய வேண்டும். ஒளி பிழம்பான முருகக் கடவுள் எல்லோருக்கும் நல்லதைக் கொடுக்கட்டும்.

S.S.S. ASSOCIATES
Buying & Selling Office & House (Rental)
A to Z Services
Male and Female Assistants (Servants)
for House work
No.198, Valluvar Kottam High Road,
Nungambakkam, Chennai - 34
(Near Baba Studio - Police Station)
Cell No. 96001 43512

## APVPதேவஸ்தான திருக்கோயிலில் அருள்மிகு வள்ளி தெய்வானை சமேத ஆறுமுகப் பெருமானுக்கு கந்தசஷ்டி இலட்சார்ச்சனை மற்றும் அன்னாபிஷேகம்

நுங்கம்பாக்கத்தில் அமைந்துள்ள APVP தேவஸ்தான திருக்கோயிலில் 2009, ஐப்பசி மாதம் 1ம்தேதி (18-10-2009) ஞாயிற்றுக்கிழமை முதல் ஐப்பசி மாதம் 6ம்தேதி (23-10-2009) வெள்ளிக்கிழமை வரை அருள்மிகு முருகப்பெருமானுக்கு கந்த சஷ்டி விழாவினை முன்னிட்டு, இலட்சார்ச்சனை விழா மிகவும் சிறப்பாக நடைபெற உள்ளது.

18-10-2009 முதல் காலை 9.00 மணி முதல் 11.30 மணிவரையும், 22-10-2009 மாலை வரை மாலை 6.00 மணிமுதல் 8.30 மணி வரை இலட்சார்ச்சனை விழா நடைபெறும்.

23-10-2009 கந்தகசஷ்டி விழா அன்று காலை 10.00 மணிக்கு சிறப்பு அபிஷேகம், சிறப்பு அலங்காரம், வழிபாடு நடைபெறும். மாலை 6.00 மணிக்கு உற்சவர் மூர்த்திக்கு ஆறுவகையான புஷ்பத்துடன் சிறப்பு புஷ்பாஞ்சலி நடைபெறும்.

இலட்சார்ச்சனை ஒன்றுக்கு கட்டணம் ரூ.150/-மட்டும். இலட்சார்ச்சனையில் பங்கு பெறுபவர்களுக்கு எவர்சில்வர் பாத்திரம் ஒன்று மற்றும் பிரசாதம் வழங்கப்படும். இலட்சார்ச்சனை நடைபெறும் தினங்களில் மாலையில் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

அன்னாபிஷேகம் ஐப்பசிமாதம் 16ம்தேதி 02-11-2009 திங்கட்கிழமை ஐப்பசி பௌர்ணமியை முன்னிட்டு அன்னாபிஷேகம் நடைபெறும் என்று செயல்அலுவலர் க.அருட்செல்வன், பரம்பரை அறங்காவலர்கள் இரா.கல்யாணராகவன், இரா.இராதாகிருஷ்ணன் ஆகியோர் தெரிவித்தனர்.





அனைவருக்கும்

எனது இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

ரெட்சன் C.அம்பிகாபதி, Ex.M.C
ஆசிரியர், ஓட்டுநர் ஓசை

மாதம்தோறும் படியுங்கள்

ஓட்டுநர் ஓசை
ஓட்டுநர் சமுதாய மாத இதழ்



# SMG தேவர் பட்டாணிக்கடை

வேர்க்கடலை, அவல், பொரி, கடலை மற்றும் ஆயுத பூஜை, விஜயதசமி பண்டிகைகளுக்கு தேவையான அனைத்துப் பொருட்களும் இங்கு கிடைக்கும்

நெ.25, வடக்கு மாட வீதி,
நுங்கம்பாக்கம், சென்னை-600 034.
(A.P.V.P. அகத்தீஸ்வரர் கோயில் எதிரில்)



## VEHICLE INSURANCE

30 to 35 % discount on vehicle insurance renewal premium

contact : 99629 72844








Bata Bata Bata Bata Bata Bata Bata Bata Bata

# SHOE WALK

147, Valluvar Kottam High Road,
Nungambakkam, Chennai - 34
Opp. to Old Suprabath Hotel

1+ 1 Free Ladies Cheppal
Gents Shoes
up to 50% offer

Bata Bata Bata Bata Bata Bata Bata Bata Bata

# A.P.V.P. தேவஸ்தான செயல் அலுவலர்
# எம். ஜெயச்சந்திரன் அவர்களுக்கு பிரிவு உபசார விழா






கடந்த 30 ஆண்டுகாலம் அறநிலையத் துறையில் பணிபுரிந்தவரும் கடந்த 35 மாதங்களாக நுங்கம்பாக்கம் APVPதேவஸ்தானத்தில் செயல் அலுவலராக பணிபுரிந்துவந்த திரு. எம்.ஜெயச்சந்திரன் அவர்கள் கடந்த மாதம் ஓய்வு பெற்றதை அடுத்து அவருக்கு சிறப்பான பிரிவு உபசார விழா நடைபெற்றது. இவ்விழாவில் அறநிலையத்துறை அதிகாரிகள், செயல் அலுவலர்கள், பல்வேறு கோயில் அர்ச்சகர்கள், தேவஸ்தான பரம்பரை அறங்காவலர்கள், APVP தேவஸ்தான அலுவலர்கள் மற்றும் ஊர் பொதுமக்கள் பலர் கலந்துகொண்டு ஓய்வுப் பெற்ற அதிகாரிக்கு வாழ்த்துத் தெரிவித்து வழியனுப்பி வைத்தார்கள். மேற்கண்ட விழாவிற்கான ஏற்பாடுகளை பரம்பரை அறங்காவலர்கள் ஆர்.கல்யாணராகவன், ஆர். ராதாகிருஷ்ணன் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.



















RNI Regn. No.TN TAM/2001/03914 R.Dis.No.1288/2008


FAST TRACK® Call Taxi

TOP4 Call Drivers

மேற்கண்ட நிறுவனத்தின் மூலம் ஆயிரக்கணக்கான ஓட்டுநர் குடும்பத்திற்கு வாழ்வளித்த நுங்கம்பாக்கத்தின் செல்லப்பிள்ளை தமிழக ஓட்டுநர்கள் & உரிமையாளர்கள் சங்கத்தின் நிறுவனத் தலைவர் ரெட்சன் C. அம்பிகாபதி அவர்களின் ஓட்டுநர் சமுதாயத்தின் உரிமைகளுக்காக குரல் கொடுக்க இருக்கும்

ஓட்டுநர் ஓசை
ஓட்டுநர் சமுதாய மாத இதழ்

மேன்மேலும் வளர வாழ்த்துகிறோம்.

சிங்காரச்சென்னை எஸ்.ரங்கநாதன் முதல் குரல் ஆர். பரசுராமன்

சரஸ்வதி பவன்

ஸ்வீட், பேக்கரி மற்றும் ஸ்நாக்ஸ்

92, (208) வள்ளுவர்கோட்டம் நெடுஞ்சாலை




பண்டிகை கால ஸ்வீட் ஆர்டர்கள் வரவேற்கப்படுகின்றன

100க்கும் மேற்பட்ட இனிப்பு வகைகள்




நிறைவான தரத்தில்! நியாயமான விலையில்!

எங்களிடம் கிடைக்கும்.




தீபாவளி
நல்வாழ்த்துக்கள்





மணிகண்டன் பேக்கரி

மற்றும் ஸ்வீட்ஸ்

198,வள்ளுவர்கோட்டம் நெடுஞ்சாலை

நுங்கம்பாக்கம், சென்னை – 600034

Ph : 2826 1956

Owned, Published and Printed by **S. RANGANATHAN,** published from 58/19, North Mada Street, Nungambakkam, Chennai-600 034
and printed at **J.S.R. GRAPHICS & PRINTERS**, 58/19, North Mada Street, Nungambakkam, Chennai-600 034. **Editor: S. RANGANATHAN.**